தேவைகளைத் தீர்க்க, தாகம் தணிக்க அறிவிப்புகளைச் செய்த தங்கத் தாரகைக்கு தமிழகம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கிறது. துப்புரவுப் பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை அளித்த மூலவரை, வள்ளல்களுக்கும் வள்ளல் என்று அவர்களின் உள்ளங்களும், இல்லங்களும் வாழ்த்துப்பா பாடுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

சுய உதவிக் குழு பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசி, அன்னை அறிவித்திருக்கின்றார்கள். தமிழகத்தின் தலையெழுத்தை உயிரெழுத்தாக மாற்றக்கூடிய விதி 110–ன்கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு வெளியிட்டுள்ள அறிவிப்புகளையும் சேர்த்து, இந்த நான்கரை ஆண்டுகளில் 176 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 176–ஐ 100 ஆல் வகுத்து, இலட்சம் கோடியில் பெருக்கி வருவதைக் கூட்ட, திட்டங்களை வகுத்து, சட்டங்களை வளைத்தவர்களை மக்கள் மனதிலிருந்து கழித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ள இந்த 176 அறிவிப்புகள் ஒவ்வொன்றும் தமிழனின் வளர்ச்சிக்கான முத்துக்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியுடன் மாந்தர் வாழ வழிவகுக்கும் மரகதங்கள், துறையின் முன்னேற்றத்திற்கான இரத்தினங்கள், இன்றைய நட்சத்திரங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வைரங்கள், நாளைய உயர்வுக்கு படிக்கட்டுகளாகும் அம்மாவின் பாசமிகு தீர்க்கமான அறிவிப்புகள்.

வேளாண்மைத் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் சார்பில் சிறப்பான அறிவிப்புகளைச் செய்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய தினத்தோடு இந்தக் கூட்டத் தொடர் முடிகிறது. பொது முக்கியத்துவம் வாய்ந்த கிட்டதட்ட 35 ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், தினம் ஒன்றை எடுத்துக்கொண்டுதான் இருக்கின்றோம்.

திரு. துரைமுருகன்: தினம் ஒன்றை எடுத்தால் என்றைக்கு சார் முடியும்? நாளையோடு கூட்டத் தொடர் முடியப் போகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தினம் ஒன்றை எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். (குறுக்கீடு) தினம் ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: இதுவரை 35 கொடுத்திருக்கின்றோம். ஒரு ஐந்தையாவது எடுக்கவில்லையென்றால் நாங்கள் எதற்கு சட்டமன்றம் வர வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்ததைத்தான் எடுத்துக்கொண்டிருக்கின்றேன். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகளையும்தான் நான் எடுத்துக்கொண்டிருக்கின்றேன். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகளையும்தான் நான் இந்த அவையிலே கவன ஈர்ப்பாக எடுத்துக் கொண்டிருக்கின்றேன். ஆகவே நீங்கள் நினைப்பதையெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது. எது எதற்கெல்லாம் பதில் அவைக்கு வருகின்றதோ, அவற்றைத்தான் கவன ஈர்ப்பாகக் கொண்டுவர முடியும். ஆகவே பதில் வந்ததையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கின்றேன். ஆகவே உங்களுடைய குறைகள் என்று எதுவும் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் எதிர்பார்ப்பது எல்லாவற்றையும் என்னால் எடுத்துக்கொள்ள முடியாது. அவைக்குப் பதில்கள் வந்ததையெல்லாம் நான் எடுத்துக் கொண்டிருக்கின்றேன். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்ததையும்தான் எடுத்திருக்கின்றேன். உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்ததை நான் எடுக்காமல் இல்லை. (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்ததை முழுக்க முழுக்க நான் ஒதுக்கவில்லை. உங்கள் கட்சி உறுப்பினர் கொடுத்ததையும் நான் எடுத்துக்கொண்டிருக்கின்றேன். ஆகவே, வரிசையாக

2015 செப்டம்பர் 28] [பேரவைத் தலைவர்]

எல்லாவற்றையும் எடுத்திருக்கின்றேன். (குறுக்கீடு) இதுவெல்லாம் முறை இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) ஒவ்வொரு நாளும் சபை தொடங்கிய நாளிலிருந்து கவன ஈர்ப்பை நான் எடுத்துக்கொண்டுதான் இருக்கின்றேன். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததையெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) திரு. துரைமுருகன் இத்தனை பேர் இப்படி எழுந்து நின்றால் எப்படி? நீங்கள் பேச வாய்ப்பு கேட்டீர்கள், உங்களுக்கு அனுமதி அளித்தேன். (குறுக்கீடு) இருங்கள். ஒரு முறை வேண்டும் அல்லவா? விதியை நீங்கள் பின்பற்ற வேண்டாமா? நீங்கள் பேச வாய்ப்பு கேட்டீர்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள், உங்களுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். இப்படி உங்கள் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் வந்தால், இது என்ன முறை? (குறுக்கீடு) இது என்ன முறை? (குறுக்கீடு) இது என்ன முறை? எந்த விதியின் பிரகாரம் இப்படியெல்லாம் வருகின்றார்கள்? இப்படியெல்லாம் வந்தால் எப்படி நான் சபையை நடத்துவது? (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்கள் யாருக்காவது கட்டுப்பட வேண்டும். யாருக்கும் கட்டுப்பட மாட்டேன் என்கிறார்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–15

இப்படி வந்தால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) நான் உங்களை மதித்துதான் பேச வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு) நீங்கள் கட்டுப்பட்டால் போதாது, உங்கள் கட்சி உறுப்பினர்களும் கட்டுப்பட வேண்டும். (குறுக்கீடு) நீங்களும், நானும் பேசிக் கொண்டிருக்கிறோம், உங்களுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது, உங்கள் கட்சி உறுப்பினர்கள் இப்படிக் கூட்டமாக வந்தால், நான் என்ன பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) இதுவெல்லாம் முறையல்ல. (குறுக்கீடு) அதுதான் நான் உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததையும்தான் ஒவ்வொன்றாக நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள் என்றுதான் சொல்கிறேன், சொல்லுங்கள். உங்களுக்குத்தான் நான் பேசுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறேன் அல்லவா? (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். கிருஷ்ணசாமி, உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த அத்தியாவசியமான நாட்டுப் பிரச்சினைகளை, முன்னிலைப் பிரச்சினைகளை 35—க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிப்புகளைக் கொடுத்தும்,* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இப்படியெல்லாம் நீங்கள் சொல்லக் கூடாது. உங்களுடைய கவன ஈர்ப்பை நான் எடுத்துக் கொள்ளாமல் இருந்தால் நீங்கள் சொல்லலாம். நீங்கள் கொடுத்ததை நான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததை நான் எடுத்திருக்கிறேன். எடுத்திருக்கும்போது நீங்கள் இதுமாதிரி செல்வது முறையல்ல. (குறுக்கீடு)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு இல்லை, அதற்கெல்லாம் பதில் ஏற்கெனவே அவையில் சொல்லியாகிவிட்டது, நீங்கள் உட்காருங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *இல்லை, இது அதுவல்ல.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கெல்லாம் பதில் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடு) அதற்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதுவெல்லாம் அவைக் குறிப்பில் வராது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், நீங்கள் சொல்லுங்கள்.*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*